12.10.2022 அ.வ.எண்.155/2019 வா.சா.1

பெயர்.திருமதி. விஜயா

சாட்சி ஆஜர், சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

3-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-

1. இவ்வழக்கை நானும் எனது கணவரும் சேர்ந்து தாக்கல் செய்தோம். அழகுராணி (எ) நதியா எனது மருமகள் என்றால் இல்லை. எனது மகனான சவுந்தர்ராஜன் மோட்டார் வாகன விபத்தில் இறந்து விட்டார். எனது மகனுக்கு திருமணம் ஆகவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலும் எனதுமகனுக்கு திருமணம் ஆகவில்லை என்றுதான் குறிப்பிட்டேன். எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாரிசு சான்றிதழ் வேண்டி தாக்கல் செய்துள்ளேன். யாருக்கு வாரிசு சான்றிதழ் வேண்டி இவ்வழக்கை தாக்கல செய்துள்ளேன் என்றால் இறந்து போன எனது மகனுக்கு நானும் எனது கணவர் மட்டுமே வாரிசு என்று வாரிசு சான்று வேண்டி வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

2. யாரிடம் வாரிசு சான்று வேண்டி விண்ணப்பம் தாக்கல் செய்தேன் என்றால் தாசில்தாரிடம் மனு கொடுத்தேன். எந்த தேதியில் மனு கொடுத்தேன் என்றால் தேதி நியாபகம் இல்லை. 4 வருடங்கள் இருக்கும். மேற்படி விண்ணப்பத்திற்கு என்ன பதில் கொடுக்கப்பட்டது என்றால் மணியகாரர் வந்து விசாரித்தார்கள். ஆனால் எழுத்து மூலமான பதில் எதுவும் கொடுக்கவில்லை. எனக்கு குடும்ப அட்டை உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி குடும்ப அட்டையில் யார் யார் எல்லாம் உறுப்பினர்களாக உள்ளார்கள் என்றால் நான், எனது கணவர், எனது காலம் சென்ற மகனாக சவுந்தர்ராஜ் மற்றும் சந்திரசேகரன் ஆகியோர்கள் உள்ளார்கள்.

3. நான் தாசில்தாரிடம் கொடுத்த விண்ணப்பத்தில் எனது காலம் சென்ற மகனான சவுந்தர்ராஜ்க்கும் 3-ம் பிரதிவாதிக்கும் கடந்த 04.11.2016-ல் திருமணம் ஆகிவிட்டது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. திருமணமே ஆகவில்லை. தாசில்தார் மேற்படி விண்ணப்பத்தில் 3-ம் பிரதிவாதியையும் சேர்த்து விண்ணப்பிக்குமாறு வா.சா.ஆ.3 ஆன பதில் அறிவிப்பு

கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.3 ஆவணம் நான் தாக்கல் செய்யவே இல்லை.

4. நான் தாக்கல் செய்த வழக்குரையிலும் நிருபண உறுதி கூற்றிலும் 3-ம் பிரதிவாதியை 04.11.2016-ல் எனது மகன் திருமணம் செய்து கொண்டார் என்று குறிப்பிட்டுவிட்டு தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 3-ம் பிரதிவாதிக்கும் எனது மகனுக்கும் நடந்த திருமணம் செல்லாது என்று ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் போட்டுள்ளேன். வழக்கு எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் மேற்சொன்னவாறு யாதோரு வழக்கும் தாக்கல செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

5. 3-ம் பிரதிவாதி அழகுமணி (எ) நதியா எந்த ஊரில் உள்ளார் என்றால் பெரியஉள்ளே பாளையம், காடகநள்ளி, குத்தியாலத்தூர் கிராமம், சத்தியமங்கலம் தாலுக்கா என்ற விலாசத்தில் வசித்து வருகிறார். மேற்படி நதியா 10-ம் வகுப்பு வரை படித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி நதியா 09.06.2000-ம் ஆண்டில் பிறந்துள்ளார் என்றால் தெரியாது. மேற்படி 3-ம் பிரதிவாதிக்கும் எனது மகனுக்கும் ஊரார் மற்றும் உறவினர் முன்னிலையில் அனைவரும் அறியும் வண்ணம் திருமணம் நடந்தது என்றால் சரியல்ல.

6. எனது மகன் விபத்தில் இறக்கும் வரை மேற்படி 3-ம் பிரதிவாதி எனது மகனுடன் சேர்ந்து எனது வீட்டில்தான் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்தும் விபத்து நஷ்ட ஈட்டிற்காக சத்தியமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் 3-ம் பிரதிவாதி MCOP.385/2018 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என் மகனுக்கு KGR பேருந்து கவிழ்ந்ததில் விபத்து ஏற்பட்டு இறந்து விட்டார்.

7. மேற்படி விபத்தில் பெற வேண்டிய நஷ்ட ஈடு பொறுத்துதான் மேற்படி MCOP.385/2018 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எங்களுக்கு நீதிமனறத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. மேற்படி வழக்கில் இவ்வழக்கின் வழக்கறிஞரையே நியமித்துள்ளோம். நான் விபத்து நஷ்ட ஈடு முழுவதையும் நாங்களே பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் 3-ம் பிரதிவாதிக்கும் எனது மகனுக்கும் திருமணம் நடைபெறவில்லை என்று இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

8. அதனால்தான் வட்டாட்சியர் விசாரணை மேற்கொண்டு மனைவியான 3-ம் பிரதிவாதியை சேர்க்காமல் வாரிசு சான்றிதழ் வழங்க முடியாது என்று வா.சா.ஆ.3 ஆன குறிப்பாணை கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 3-ம் பிரதிவாதி எனது மகனின் சட்டப்படியான மனைவி என்பதால்தான் எனது மகனுக்கும் 3-ம் பரிதிவாதிக்கும் நடந்த திருமணம் செல்லாது என்றும் யாதொரு வழக்கும் எந்த நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

9. அதனால் நானும் எனது கணவரும் மட்டும் இறந்து போன சவுந்தர்ராஜனுக்கு வாரிசுகள் என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் பிரமாண பத்திரிக்கையில் எனது மகனுக்கும் 3-ம் பிரதிவாதிக்கும் நடந்த திருமணம் செல்லாது என்று பஞ்சாயத்து நடந்தது என்று சொல்லியுள்ள விவரம் தவறு என்று சொன்னால் சரிதான். அதனால் என்னுடைய வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

(Sd)விஜயா

(Sd)Tmt.P.Sharmila, B.B.A., B.L.,
District Munsif,
Sathyamangalam.